
# மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் இந்தியர்களின் வாழ்க்கை நிலை ஆராயப்படும்!



படத்தில் டத்தோ டாக்டர் டெனிசன் ஜெயசூரியா, தகவல் துறை அதிகாரிகள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பிரிவின் துணை இயக்குநர்கள் ஆகியோரைக் காணலாம்.

**(பத்மினி ராஜமாணிக்கம்)**

**கோலாலம்பூர், ஜூன் 19-**

மக்கள் தொகை மற்றும் குடியிருப்புக் கணக்கெடுப்பு தேசிய அளவில் வரும் ஜூலை மாதம் 6ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 22ஆம் தேதி வரை நடைபெறும். இந்த கணக்கெடுப்பு, புள்ளிவிவரம் மற்றும் ஆய்வின் முக்கிய நோக்கம் இந்நாட்டிலுள்ள துல்லியமான மக்கள் தொகை,குடியிருப்பு, இனம், வயது, பொருளாதார நிலை, சமூக நிலை, குடும்ப வருமானம், தொழில், பிள்ளைகள் கல்வித்தரம், அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம் போன்ற விவரங்கள் ஆராயப்படும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என்று மக்கள் தொகை மற்றும் புள்ளி விவர இலாகாவின் துணை இயக்குநர் துரைராஜூ சுப்பன் பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த ஒட்டு மொத்த ஆய்விற்குப் பின், மாநில ரீதியில் இந்தியர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு, வாழ்வாதாரம், வறுமைநிலை, கல்விநிலை போன்ற பிரச்னைகள் ஆராயப்படும். இதன் மூலம் மலேசிய இந்தியர்களின் இன்றைய உண்மை நிலையைப் பற்றிய விவரங்கள் தக்க துறைகளிடம் கலந்து ஆலோசிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1960 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்ட திட்டத்தின் கீழ் இந்த வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது. இதன் தொடர்பாக நடத்தப்படும் புள்ளிவிவரங்கள் அனைத்தும் ரகசியமாக பாதுகாக்கப்படும். ஆகவே மக்கள் பயப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒவ்வொரு 10 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படவேண்டும். இது நாட்டின் 5ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பாகும். இதற்கு முன் 1970ஆம் ஆண்டு, 1980 ஆம் ஆண்டு, 1991ஆம் ஆண்டு மற்றும் 2000ஆம் ஆண்டு இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அவர் மேலும் இது தொடர்பாக கூறுகையில், மக்கள் தொகை - கணக்கெடுப்பு அதிகாரிகள் அதிகார அட்டைகளுடன் உங்கள் இல்லத்தைத் தேடி வரும் போது, உங்கள் குடும்பங்களின் உண்மை நிலவரங்களை துல்லியமாக எடுத்துக் கூறலாம். இந்த ஆய்வின் போது, குடும்பத்தினர், வயது, டிவி, ரேடியோ, கார், மாத வருமானம்,தொழில், பிள்ளைகளின் கல்விநிலை இது போன்ற அனைத்தும் புள்ளி விவரங்களாக அதிகாரிகள் சேகரிப்பர். ஆகவே மக்கள் என்னவோ ஏதோ என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறினார். இந்நிகழ்வில் இந்தியர்களுக்கான சிறப்பு அமலாக்க அமைச்சரவை செயற்குழுச் செயலாளர் டத்தோ டாக்டர் டெனிசன் ஜெயசூரியா,தகவல்துறை அதிகாரிகள் தனபாலன், குலமகள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பிரிவின் துணை இயக்குநர்கள் துரைராஜூ சுப்பன், பிரேமலதா மற்றும் அதன் பொது உறவு அதிகாரி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.இது தொடர்பாக மேலும் விவரம் அறிய விரும்புபவர்கள் 1-800-88-7828 அல்லது www.statistics.gov.my எனும் இணைய முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.